www.padippakam.com

# MINISTERS FURIOUS

President J. R. Jayawardene has called for constructive suggestions from his Ministers to combat the increasing tide of terrorism.

This follows a barrage of criticism at recent Cabinet sessions that Government was not acting purposefully enough to stamp out terrorism.

Producing a letter purported to have been written by the Tamil Eelam Liberation Tigers claiming responsibility for the C.I.D. murder and also other communally provocative articles published in the Press, the Ministers criticized the Government's lethargic attitude.

They charged the TULF played a double role, one of rabble-rousing in the North and another of cooperation with government in Parliament.

They also pointed out that back benchers had been hostile to the TULF in Parliament on Tuesday because of the killings of the four C.I.D. men.

The President said he was aware and did not approve at all of the terrorist tactics. He would strike and strike hard when the time was opportune.

Meanwhile he asked for their constructive suggestions.

# J. R. WARNS AMIRTHS

President J. R. Jayawardene has warned TULF leader A. Amirthalingam of the growing concern among Ceylonese both Sinhalese and Tamils over terrorist activity in the North.

The President has requested the TULF leader to exert the full influence of his party on those youth who have formed terrorist gangs and dissuade them from militant activity.

He has pointed out that police intelligence reports indicate that certain Northern politicians are involved with militant youth and urged that this cease fortwith.

Mr. Jayawardene also said that the police were in possession of highly inflammatory speeches made by TULFers (and their wives) as also articles appearing in a Tamil periodical in the North. The TULF leader, he said, should ensure that this should not continue.

# வடக்கில் மூலைக்குமூலை பொலிஸ்; தேடுதல், ரோந்துவேலைகள் மும்முரம்!

யாழ்ப்பாணம், மே. 14

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் திரட்டப்பட்டு, கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட விசேஷ பொலிஸார் நேற்று முதல் வட பகுதியின் சகல பகுதிகளிலும், முருங்கன் கொலைகள், இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலை சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களைத் தேடுவதில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாண நகரத்திலும், வடக்கின் கிராமப் புறங்களிலும் ஆயுதம் தாங்கிய பொலிஸாரும், இராணுவத்தினரும் கூட்டாக ரோந்து புரிந்து வருகின்றனர்.

சனிக்கிழமை காலை சுமார் 250 பொலிஸார் கொழும்பிலிருந்து வந்து சேர்ந்தனர். இவர்களில் பலர் சாதாரண உடையில் நகரின் முக்கிய இடங்களிலும், ரியூட்டரிகள், சினிமாத் தியேட்டர்கள், பஸ் நிலையங்கள் போன்ற இடங்களிலும் நடமாடித் திரிகின்றனர். இவர்களில் பலர் சந்தேக நபர்கள் எனக் கருதப்படுவோரின் புகைப் படங்களை வைத்துக் கொண்டு தாம் காணும் ஆட்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள்.

கிராமப் புறங்களிலும் இதே போன்று பொலிஸார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

நகரங்களிலும், கிராமங்களிலும் மட்டுமன்றி கடற்கரையோரங்களிலும் ரோந்து — தேடுதல் நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. பொலிஸ் — இராணுவ வீரர்கள் ஒன்றாகத் திரிந்தே ரோந்து புரிகின்றனர். இவர்களில் சில பிரிவினர் வீடுகளில் ஆயுதம் ஏதாவது இருக்கின்றனவா என்றும் தேடுதல் நடத்துகிறார்கள்.

வடபகுதியில் உள்ள கம்மாலைகள், கராஜுகள் என்பனவும் பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து வந்த பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவதற்கு முன்னர், தமது தேடுதல் வேலைகளின்போது அவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி உயர் அதிகாரிகள் போதனைகள் வழங்குகிறார்கள்.

அத்தோடு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இப்போது உயர் அதிகாரிகள் அடிக்கடி கூடி, கலந்துரையாடல்கள் நடத்துகிறார்கள். துப்புத் துலக்குதல், தேடுதல் வேட்டை என்பனவற்றில் ஏற்பட்டு வரும் முன்னேற்றம், மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்பன பற்றியே பிரஸ்தாப கலந்துரையாடல்களில் ஆராயப்படுவதாகத் தெரிகிறது.

பத்மநாதன் கொலை சம்பந்தமாகப் பல இளைஞர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு விடப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

சந்தேக நபர்கள் தங்கியிருக்கக் கூடிய வீடுகள் எனக் கருதப்படும் சில வீடுகளுக்கு ஒரே நேரத்தில் சென்று தேடுதல் நடத்தும் திட்டம் பற்றியும் பொலிஸ் வட்டாரங்கள் ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது. (ஞ-120)

# A.S.P. TOURS WORLD CAPITALS FOR INVESTIGATIONS

By Ranil Weerasingha

According to the widow of Inspector Bastianpillai—one of the officers killed last month—a telephone call received by her revealed that some Lankans residing in England had been aware of the death of her husband long before the local Police had identified the body.

An ASP from the Internal Security Division (ISD) is now in England probing this matter. His investigations are expected to take him to several other capitals.

The CID too is expected to send an officer to Oman to question a person said to be the main share holder of the farm where the CID officers were killed. Local investigators are expecting assistance in this matter from the Oman Police Chief Mr. Felix Silva, who happens to be a Sri Lankan.

The DIG (CID) Mr. Herbert Weerasinghe and the Director of the CID Mr. A. Navaratnam are now in India to solict the assistance of the Tamil Nadu Police in apprehending members of the Liberation Tiger Movement who may seek refuge there. Police are of the view that some 'members of this movement may try to slip

படிப்பகம்

www.padippakam.com

# பயங்கரவாத முகாம்

13-5-78

# முருங்கனில் முற்றுகை

## என்ஜினியர் உட்பட 12 வாலிபர்கள் கைது!

— தினபதி யாழ். நிருபர்: கே. அரசரத்தினம் —

யாழ்ப்பாணம், மே. 13

பயங்கரவாத நடவடிக்கைகளில் இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து வந்ததாகக் கருதப்படும் முகாம் ஒன்று வியாழக்கிழமை பிற்பகலில் பொலிஸ் — இராணுவக் கோஷ்டி ஒன்றினுல் முற்றுகையிடப்பட்டது.

வவுனியா — முருங்கன் பாதையில், வவுனியாவில் இருந்து 18 மைல் தொலைவில், ஒரு மைல் காட்டுக்குள் இருந்த பிரஸ்தாப முகாமில் இருந்த 12 வாலிபர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் ரஷ்யாவில் பொறியியலாளராகப் படித்துப் பட்டம் பெற்று, பின்னர் பிரிட்டன் சென்று தொழில் புரிந்துவிட்டு நாடு திரும்பியவர் எனக் கூறப்படுகிறது.

கைதான வாலிபர்களில் 5 பேர் வட பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், மிகுதி 7 பேரும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளதாம்.

வவுனியாவைச் சேர்ந்த சுமார் 30 பேரைக் கொண்ட பொலீஸ் — இராணுவக் கூட்டுக் கோஷ்டி ஒன்று பிரஸ்தாப முகாமை முற்றுகையிட்டு, அங்கு ஆயுதப் பயிற்சி நடைபெற்றதற்கான தடயங்களைக் கண்டறிந்தனர்.

கைதான வாலிபர்களிடமிருந்து 2 துப்பாக்கிகளும் பெரும் தொகையான தோட்டாக்களும் பல தஸ்தாவேஜுகள் கொண்ட பெரிய பைல் கட்டு ஒன்றும் கைப்பற்றப்பட்டன என்று கூறப்பட்டது.

முருங்கன், வவுனியா, மன்னார், மதவாச்சி பொலீஸ் நிலையங்களின் வரைபடங்கள், அவற்றில் பணியாற்றும் முக்கிய பொலீஸ் அதிகாரிகளின் விவரங்கள் ஆகியனவும் முகாமிலிருந்து கண்டெடுக்கப்பட்டனவாம்.

கைதான வாலிபர்கள் வவுனியா பொலீஸ் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டனர். (கு- 120)

---

## கண்ணாட்டியில் கைதான இளைஞர்களிடம் பயங்கர ஆயுதங்கள்!

13-5-78

(நமது வவுனியா நிருபர்)

வவுனியா-மன்னார் வீதியில் உள்ள கண்ணாட்டி என்ற இடத்தில்கடந்தபுதன்கிழமை இரகசியப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட எட்டு இளைஞர்களிடமிருந்து பல பயங்கர ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனவாம்.

இந்தஇளைஞர்களிடமிருந்து இரண்டு அனுமதிப் பத்திரமற்ற துப்பாக்கிகள், பாவிக்கப்பட்ட துப்பாக்கி ரவைகள், பாவிக்கப்பட்டதும், பாவிக்கப்படாததுமான கைச்சுழல் துப்பாக்கி ரவைகள், இயந்திர துப்பாக்கி ரவை, முருங்கன் உட்பட பல இடங்களின் வரைபடங்கள், பல உள்நாட்டு, வெளிநாட்டு கடிதக் கோவைகள், அரசியல் தொடர்புள்ள கடிதக்கோவைகள், கெரில்லாப் பயங்கரவாத யுத்தப்புத்தகங்கள் ஆகியன கண்டு பிடிக்கப்பட்டனவாம்.

இவ்விளைஞர்களுக்கும்முருங்கனில் நடைபெற்ற சி. ஐ. டி. பொலிசாரின் கொலைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதாகப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

---

## பொலிஸ் அதிகாரிகள் தமிழ்நாடு பயணம்

(கேசரி நிருபர்)

இரகசிய பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. ஹேபர்ட் வீரசிங்க. இரகசிய பொலிஸ் அதிபர் திரு. நவரத்தினம் ஆகிய இருவரும் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் இந்தியாவுக்குப் பயணமானார்கள்.

உயர் இந்திய பொலிஸ் அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு பொலிஸ் அதிபர் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தவே இவர்கள் இத்திடீர் விஜயத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

வடபகுதியில் அண்மையில் நடைபெற்றுவரும் பொலிஸ் அதிகாரிகள் கொலைச்சம்பவங்களில் ஈடுபடும் கொலைஞர்கள் தமிழ் நாட்டுக்குத் தப்பி ஓடியிருக்கலாமென்று பொலிஸ் நம்புவதால் பிரஸ்தாப கொலைஞர்களை சட்டத்தின் பிடியில் கொண்டுவருவதற்கு தமிழ்நாட்டு பொலிஸாரின் ஒத்துழைப்பு கோரப்படுவதாகவும் தெரிகிறது.

இதுதொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துமுகமாகவே இவ்விருவரும் அங்கு சென்றுள்ளனர்.

---

## வெடிகுண்டு வைத்திருந்தாராம்

பெய்ரூத், ஏப்.18

சுமார் 11 ருத்தல் எடையுள்ள இரு கைக்குண்டுகளுடன் குவைத் நாட்டிற்கு விமானமேற முயன்ற இலங்கையர் ஒருவரை பாதுகாப்பு அதிகாரிகள் விமான நிலையத்தில் தடுத்துவைத்தனர்.

விசாரணையின்போது அந்த நபர் தான் ஒரு எண்ணெய் பொறியியலாளரென்றும், தனது வேலைகளின்போது வெடி சம்பந்தமான தளபாடங்களைக் கையாளுவதுண்டு என்றும் தெரிவித்ததாக அதிகாரிகள் பின்னர் அறிவித்தனர். அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுமத்தப்பட்டவில்லை.

---

## இவர்களுக்கு எப்படித் தெரிந்தது?

முருங்கனில் பொலிஸ் அதிகாரிகள் கொலை செய்யப்பட்ட செய்தி இலங்கையில் பொலிசாருக்குத் தெரிவதற்கு முன் இங்கிலாந்திலுள்ளவர்களுக்குத் தெரிந்தது எப்படி என்பது பற்றி இரகசியப் பொலிசார் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர். திரு. பஸ்தியாம்பிள்ளை உட்படப் பொலிஸ் அதிகாரிகள் கொலைசெய்யப்பட்டமை பற்றி இலங்கையில் வெளியாவதற்கு இரு நாட்களுக்கு முன்னதாகவே லண்டனில் பரவலாக இலங்கையர் மத்தியில் பேசப்பட்டதாம்.

www.padippakam.com

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தடை மசோதா:

# அரசமைப்பு நீதிமன்றம் நாளை தீர்ப்பு வழங்கும்

கொழும்பு, மே 17

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தடை விதிக்கும் மசோதா பற்றி ஆராய்ந்த அரசமைப்பு நீதிமன்றம், அதன் தீர்ப்பை நாளை, சபாநாயகரிடம் கையளிக்கும்.

அரசமைப்பு நீதிமன்ற நீதியரசர் திரு. சி. வி. உடலகம (தலைவர்), நீதியரசர் திரு. ரி. ஏ. டீ. எஸ். விஜேசுந்தர நீதியரசர் திரு. நொயல்டிட்டவெல ஆகியோர் முன்னிலையில் மேற்படி மசோதா சமர்ப்பிக்கப்பட்டு, ஆராயப்பட்டது.

பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் திரு. ஜி. பி. எஸ். டீ சில்வா இம்மசோதா பற்றி எடுத்து விளக்குகையில் கூறியதாவது:—

அரசமைப்புக்கு ஏற்ற வகையில் அரசமைப்புச் சட்ட அஸ்திவாரத்தைப் பாதுகாக்கும் முகமாகவே இம் மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்நாடு ஒரு தனிநாடு. இதை எவரும் துண்டாட முடியாது. இந்நாட்டின் சுதந்திரம், தன்னாதிக்கம், ஐக்கியம், பிராந்திய இணைப்பு ஆகியவற்றைப் பாதுகாக்க அரசமைப்புச் சட்டம் 16(3) வழிவகுத்துள்ளது. எனவேதான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தடைவிதிக்க வேண்டுமென மசோதா கொண்டு வரப்படுகிறது.

தலைவர்: அத்தகைய ஒரு இயக்கம் இயங்குகின்றதா? அது பதிவு செய்யப்பட்டுள்ளதா?

திரு. சில்வா: சட்டத்துக்கு தெரிந்த ஒரு விடயமே இதுவாகும். அந்த இயக்கத்தினரே தம்மை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமென தெரிவித்துள்ளனர். அதன் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக பலாத்காரம் உபயோகிப்பதை அது கடைப்பிடிக்கிறது.

இந்த மசோதா, அரசமைப்புச் சட்டத்தின் எந்த ஒரு அடிப்படை உரிமையையும் பாதிக்கிறதா என்பதையே இந்த நீதிமன்றம் கவனிக்க வேண்டும்.

நீதியரசர் திரு. விஜேசுந்தர: ஏதாவது ஒரு ஷரத்தை இது பாதிக்குமானால், உங்கள் நிலை என்ன?

திரு. சில்வா: எந்த ஒரு சட்ட ஷரத்தையும் இம்மசோதா பாதிக்கவில்லை என்பதே என் வாதமாகும்.

அரசமைப்புச் சட்டத்தின் 55(1) விதியின் பிரகாரமே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தடை மசோதா, 15 சட்ட விதிகளுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

இம்மசோதா ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எனவேதான் 24 மணி நேரத்துள், இதுபற்றிய தீர்ப்பை இந்நீதிமன்றம் வழங்கவேண்டும்.

நாட்டின் சில பகுதிகளில், இந்த இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்ட வன்செயல்கள், நாட்டின் பாதுகாப்பை தகர்த்து, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைகுலையச் செய்துள்ளது.

எனவே இத்தகைய இயக்கங்களைத் தடை செய்து, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

எந்த ஒரு இயக்கமும் வன்செயல்களில் ஈடுபட்டு, சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டால், வர்த்தமானி அறிவித்தல்மூலம் அதனைத் தடைசெய்ய, ஜனாதிபதி விரும்பினால், அப்படிச் செய்யலாம்.

தணிக்கை அதிகாரியின் அனுமதியின்றி, இவ்வாறான இயக்கங்கள் பற்றிய எத்தகைய விபரங்களையும் பிரசுரிக்கவும், இம்மசோதாவின் 5(1) விதி தடைவிதிக்கிறது.

இந்நாட்டிலோ, வெளிநாட்டிலோ, இத்தகைய இயக்கங்கள் பற்றிய துண்டுப் பிரசுரங்கள் விநியோகிப்பதும் குற்றமாகக் கணிக்கப்படும்.

வர்த்தமானி மூலம் தடை விதிக்கும் உத்தரவுகள், 30 நாட்களுக்குள், தேசிய அரச பேரவையின் அங்கீகாரத்தைப் பெறாவிட்டால், 30 நாட்களுக்குப் பின்னர், அது செல்லுபடியாகாமற் போய்விடும்.

தேசிய அரச பேரவையால் அங்கீகரிக்கப்படும் உத்தரவுகள் ஒரு வருட காலத்திற்கு அமுலில் இருக்கும்" என்றார்.

இதன் பின்னர், இம் மசோதா பற்றிய தீர்ப்பை, நாளை வியாழக்கிழமை, சபாநாயகரிடம் கையளிப்பதாக நீதிமன்றம் அறிவித்தது. (க)

## மன்னாரில் 11 பேர் விசாரணை

(கேசரி நிருபர்)

வட பகுதியில் நடைபெற்ற வன்செயல் சம்பவங்கள் தொடர்பாக மன்னார் அகதிகள் புனர்வாழ்வு குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த 11 பேர் விசாரணைக்காக பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிகிறது.

பிரஸ்தாப நபர்கள் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போதிலும் இன்னும் விடுவிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

மன்னாரில் நடைபெற்ற இரகசிய பொலிஸ் அதிகாரிகளின் கொலை சம்பவங்கள் தொடர்பாகவே இவர்கள் விசாரணைக்குட்பட்டு வருவதாக அறியவருகிறது.

## சட்டமூலத்தை தமிழர் கூட்டணி எதிர்க்கும்?

(நமது நிருபர்)

தமிழ் ஈழ விடுதலைப் புலிப் படையினைத் தடை செய்வதற்காக நாளை தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்படும் சட்டமூலத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்ப்புத் தெரிவிக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் 'தினகரனுக்குத் தெரிவித்தார்.

நாளைக்காலை கூடும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் இதுபற்றி இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

நீதியமைச்சர் சமர்ப்பிக்கும் குற்றவியல் தண்டனைகள் திருத்துவது பற்றிய மசோதாவையும் தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்குமெனவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

அவசரமாக சட்டமாக்கப்படவுள்ள இச்சட்டமூலத்தின் ஷரத்துக்கள் விதிகள் பற்றித் தாம் இப்பொழுது ஆராய்ந்து கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## குவைத்தில் இலங்கையர் கைது

## யாழ். வளாக மாணவர் கைது

யாழ்ப்பாணம், மே 16

முருங்கனில் சி. ஐ. டி. பொலிஸார் நால்வரின் கொலை, இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலை ஆகியன தொடர்பாக யாழ். வளாக விஞ்ஞானப் பிரிவு இரண்டாவது வருட மாணவர் விரசிங்கம் குணசேகரத்தை நேற்றுப் பொலிஸார் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்.

வவுனியாவில் அகதிகள் முகாமில் பணியாற்றி வந்த சமயமே அவர் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டார்.

அவருடன் இன்னும் ஏழு தமிழ் மாணவர்களும் விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்று தெரிகிறது. (உ-120)

படிப்பகம்

www.padippakam.com

(3)

வன்செயலில் ஈடுபடுவோருக்கு

# பிணை கிடையாது:

# தடுக்கச் சட்டம்

## நாளை பேரவையில் விவாதம்

— தினபதி நிருபர்: என். துரைராஜசிங்கம் —

கொழும்பு, மே 17

அரசாங்கத்துக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் எதிராக வன்செயல் புரிவோர், கொலைகள், கொள்ளைகள் போன்ற பாரதூரமான குற்றங்களைச் செய்வோர், பிணையில் செல்வதற்கு இனிமேல் தடை விதிக்கப்படும்.

அதாவது அவர்கள் கைது செய்யப்படும் நாள் முதல் வழக்குத் தீர்ப்புக் கிடைக்கும் நாள் வரை விளக்கமறியலில் வைக்கப்படுவர்.

அதற்கான விசேஷ மசோதாவை நாளை தேசிய அரச பேரவையில் நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் சமர்ப்பிக்க இருக்கிறார்.

விசேஷ குற்றக் கோவை மசோதா என அழைக்கப்படும் இந்தச் சட்ட மூலத்தின் கீழ், குறிப்பிட்ட சில குற்றங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட தண்டனை வழங்குவதும் தடை செய்யப்படும்.

பாரதூரமான குற்றச் செயல்களைப் புரிந்தவர்கள் நிபந்தனையுடன் விடுவிக்கப்படுவதனை தடை செய்வதற்கும் இந்த மசோதா வகை செய்கிறது.

கடந்த காலங்களில் நீண்ட நாட்கள் சந்தேக நபர்களை கைது செய்து தடுப்புக் காவலில் வைத்திருக்க அவசரகாலச் சட்ட விதிகள் இடமளித்தன

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதால், இப்பொழுது எவராவது விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டால், அவரை மறுநாள் (24 மணி நேரத்துள்) நீதவான் முன்னிலையில் பொலீஸார் ஆஜர் செய்ய வேண்டும். விசாரணையின் பின், நீதவான் சந்தேக நபரை தொடர்ந்து சில நாட்கள் விளக்கமறியலில் வைத்திருக்க உத்தரவிடலாம். அல்லது அவரைப் பிணையில் செல்ல அனுமதிக்கலாம்.

புதிதாகக் கொண்டுவரப்படும் விசேஷ குற்றக் கோவைச் சட்டத்தின்படி, அரச விரோதச் செயல்கள் தொடர்பாகக் கைதுசெய்யப்படுவோரை காலவரையறையின்றி விளக்க மறியலில் வைத்திருக்க முடியும். இதனை எதிர்த்து எவரும் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுதாக்கல் செய்ய முடியாது.

அரசாங்க அதிகாரிகள் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது அவர்களைக் கொலை செய்தல், அரசாங்கத்துக்கு சொந்தமான தஸ்தாவேஜுகளை அழித்தல் அல்லது களவாடல் போன்ற அரச விரோதச் செயல்களைச் செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கும் முகமாகவே இச்சட்டம் கொண்டுவரப்படுவதாக நீதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

சட்டக்கோவை விசேஷ மசோதா விதிகள் பாதுகாப்பு அமைச்சின் அனுசரணையுடன் நீதி அமைச்சினால் தயாரிக்கப்பட்டன.

### அரசமைப்பு நீதிமன்றத்தில்

பிரஸ்தாப மசோதா அவசர மசோதாவாகக் கருதப்பட்டு அரசமைப்பு நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருந்தது. மசோதா பற்றிய விசாரணை நீதியரசர் ஜெயபத்திரான தலைமையிலான அரசமைப்பு நீதிமன்றத்தின் முன் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

மசோதா அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது அல்ல என்று பிரதிச் சொலிசிஸ்டர் ஜெனரல் திரு. ஜி. பி. எஸ். டி சில்வா நீதிமன்றத்தின்முன் வாதிட்டார்.

அரசமைப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பு நாளை (வியாழக்கிழமை) தேசியஅரச பேரவைக்குச் சமர்ப்பிக்கப்படும். (ரு-10)